★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 புரட்டாதி 31 ஜுல்கஜ் 29 இதழ் 246
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 17—10—82

இன்றிரவு
வீரசிங்கம் மண்டபம்
''மேகம்'' சஞ்சிகை ஆதரவில்
K. R, மகேந்திரன் அளிக்கும்
MY FAIR LADY
(இசை விநோத இரவு)
டிக்கட் மண்டப வாயிலில் ...!
4852

சூடானில்

## 8 சில்லாலை இளைஞர்கள் தடுப்புக்காவலில்

(பண்டத்தரிப்பு)

வெளிநாடு ஒன்றில் வேலை வாய்ப்பு பெறுவதற்காக சென்ற சில்லாலையைச்சேர்ந்த எட்டு இளைஞர்கள் விசா அனுமதிப்பத்திரம் எதுவும் இல்லாத நிலையில் சூடான் நாட்டில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்த இளைஞர்கள் தங்கள் பெற்றோருக்கு அனுப்பிவைத்துள்ள அவசர தந்திச்செய்தி

[6ம் பக்கம் பார்க்க]

தேர்தல் கடமைகளுக்கு

# 900 தமிழ் பேசும் ஊழியர் நாளை யாழ்ப்பாணம் வருவர்

## வாக்குச் சாவடிகளில் பொலிஸ் - ராணுவம் காவல்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் கடமைகளுக்காக யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு கொழும்பிலிருந்தும், வன்னி மாவட்டத்திலிருந்தும் 900 தமிழ் பேசும் ஊழியர்கள் நாளை திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை இந்த ஊழியர்கள் கடமையாற்றும் அந்தந்தத் தொகுதிகளில அமைக்கப்பட்ட இரு தங்குமிநிலையங்களில் வாக்குப்பெட்டிகள், வாக்குச்சீட்டுகளுடன் தங்கியிருப்பார்கள். இந்நிலையங்கள் பலத்த இராணுவப் பாதுகாப்பில் இருக்கும்.

வாக்களிப்புத்தினமான புதன்கிழமை காலை அலுவலர்கள் தங்கள் வாக்குச்சாவடிகளுக்குச் செல்வர்.

இராணுவ, பொலிஸ் பாதுகாப்புடன் வாக்குப்பெட்டிகள், வாக்குசீட்டுகள் வாக்களிக்கும் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 3 இராணுவத்தினரும் இரு பொலிசாரும் காவல் புரிவர்.

இவர்களுக்கு உதவியாக இராணுவத்தினர் ரோந்து சேவையில் ஈடுபட்டிருப்பார்கள்.

யாழ். மாவட்டத்திலுள்ள 436 வாக்களிப்பு நிலையங்களில் 4,93,711 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதில் பதினொரு நிலையங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆகக்கூடிய வாக்காளர் உள்ள நிலையம் கிளிநொச்சி அ. த. க. பாடசாலையாகும். ஆகக்குறைந்தது பருத்தித்துறை சுண்டிக்குளம் வாக்களிப்பு நிலையமாகும்.

வாக்களிப்பு நிலையங்களில் ஆகக்கூடியது பாடசாலைகள். மற்ற இடங்கள் சனசமுகநிலையங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், கோவில் மடங்களாகும்.

யாழ்.மாவட்டத்தில் தற்காலிக வாக்களிக்கும் நிலையமாக கொழும்புத்துறை சர்தன மாதா கோவிலில் 2,400 ரூபா செலவில் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (மா)

### அறிவித்தல்

நேற்றிரவு ஏற்பட்ட மின்தடை காரணமாக, இன்று ஈழநாடு 6 பக்கங்களுடன் வெளிவருகிறது.

— நிர்வாகி, 'ஈழநாடு'

## ஆட்சிப் பங்கீட்டுக்கு இவர்கள் சம்மதம்

[யாழ்ப்பாணம்]

நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவநாணயக்காராவின் வேண்டுதலுக்கமைய தமிழ் இளைஞர்கள் பலர் வாசுதேவாவின் போரட்டக் கொள்கைகளைப் பின்பற்ற ஒப்புதல் கொடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் செவ்வாய்க்கிழமை மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் திரு. வாசுதேவ நாணயக்காரா பேசிமுடிக்கையில் ''ஆட்சியைப் பங்கீடு செய்ய தமிழ் இளைஞர்கள் தன்னுடன் சேர்ந்து போராட முன்வரவேண்டும்'' என்றும் விரும்பியவர்கள் இப்போதே தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறும் வேணடுகோள் விடுத்தார். இதைத் தொடர்ந்துபல தமிழ் இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக மேடையில் ஏறி தமது பெயர்களைப்பதிவு செய்தனர். (வண்-நிரு)

## இன்று அவசரகாலம் பிரகடனமாகும்?

### போப்பகே ஹேஷ்யம்

[மாவிட்டபுரம்]

''17ம் திகதி நாடுமுழுவதும் அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்படலாம். இது பற்றி எமக்கு இரகசியமாக தெரியவந்துள்ளது'' இப்படிக் கூறுகிறார் மக்கள் விடுதலை முன்னனி செயலாளர் திரு. லயனல் போபகே.

குரும்பசிட்டி அரசடிபிள்ளையார் கோவிலுக்கருகாமையில் கடந்த 15ம் திகதி இரவு நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இப்படிக்கூறினார்.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நாட்டில் நெருக்கடியான நிலையை அரசு எதிர்நோக்கிவருவதால் 17ம் திகதி முதல் அவசரகாலச்சட்டம் அமுல் செய்யப்படலாம் என எதிர்பார்ப்பதாகவும் இது பற்றி இரகசியமான முறையில் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு திரு.இ. சுதர்சனன் தலைமை தாங்கினார்.

திரு லயனல் போபகே மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இந்தநாட்டில் 1972ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கொண்டுவந்த அரசியலமைப்பு சட்டமும், 1978ம் ஆண்டு ஐ. தே. க. கொண்டுவந்த அரசியலமைப்புச் சட்டமும் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் அளிக்கவில்லை.

சிங்கள மொழிக்கு முதன்மையும், பௌத்த மதத்திற்கு முக்கியத்துவமும் அளிக்கப்பட்டதால் ஏனையமக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அவர்களது மொழி, மதம் ஆகியவற்றுக்கு போதிய பாதுகாப்பு இல்லை. இந்த நிலையைபோக்குவதே மக்கள் விடுதலை முன்னணியின் நோக்கம் எமது கட்சியில் அரசமொழி, அரசமதம் என்ற நிலை இருக்காது சகல மொழிகளும், மதங்களும் சம இடத்தில் வைத்து வளர்க்கப்படுமென்பது உறுதி.

மற்றும் திரு கே. கணேசபிள்ளை திரு. லெனின் ஆகியோரும் பேசினர்.



யே. ம. சூ துணை
நாளை
புதுக்கடை திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் துந்துபி வருடம் ஐப்பசித் திங்கள் முதலாம் நாள் (18-10-82) திங்கட்கிழமை
மு. ப. 10 மணிக்கு வரும் சுபமுகூர்த்தத்தில்,
அருட்தந்தை ஸ்பொம்பதி ( O. M. I. ) அவர்களால் ஆரம்பித்துவைக்கப்படும்.

நியூட்டன் றேட் சென்டர்

என்னும் வர்த்தக நிலையத்தில் வியாபாரத்தை ஆரம்பிக்க இருப்பதால் அவ்வமயம் தாங்களும்
வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்

31, கஸ்தூரியார் றேட்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
லோறன்ஸ் அலக்சாண்டர் (4869)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பளை தோட்டத்திலுள்ள சுமார் 300 மரங்களிலுள்ள மாம்பழங்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: எஸ். என் நடராசா, 51, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
4842

சமீபத்தில் இறக்குமதி செய்யப்பட்ட புதிய தமிழ் 'ரெமிங்ரன்' தட்டச்சு யந்திரங்கள் (20 அங்குலம்) விற்பனைக்குண்டு. சாமுவேல் சன்ஸ் அன் கம். லிமிட்., 208, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
4844

கொக்குவில் கிழக்கு ரெம்பிள் வீதியில் சாரதா மகளிர் கல்லூரி அருகாமையில் 4½ பரப்புக்காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; சி. தாமோதரம் பிள்ளை நந்தாவில் அம்மன் கோவிலடி, கோண்டாவில். 4850

அரியாலையில், கண்டி வீதியிலிருந்து சுமார் 300யார் தூரத்தில் செம்மணி வீதியில்) 4அல்லது 5 பரப்புக்காணிவிற்பனைக்குண்டு. வீடுகட்டுவதற்கு உகந்தது. மின்சாரவசதியும் பெறக்கூடியது. நேரில் தொடர்பு கொள்க. T. தியாகராஜா, ப.நோ.கூ. சங்க கிளை வீதி நாவற்குழி. 4856

இரு பகுதிகளைக் கொண்ட வீடு ஒவ்வொன்றும் இரு அறைகள் சகல வசதிகளோடு விற்பனைக்குண்டு. மக்கள் வங்கி, பிரதானவீதி அருகாமையில். 91, மூன்றும் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 4860

நக்கா வீதியுடன் இணைந்த நக்கா லேனில் குடியிருப்புக்கு உகந்த 8 பரப்புக்காணி முழுமையாகவோ பகுதிபகுதியாகவோ பிரித்து உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: டாக்டர் குரு செற் தம்பையா, இல: 11, குரு செற் லேன். கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 4856

எலெக்ரோலக்ஸ் 5அங் குளிர் சாதனப்பெட்டி, பிலிப்ஸ் ஸ்பூல் ரேப் றெக்கோடர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 341, கொழும்புத்துறை ரோட், யாழ்ப்பாணம். 4826

யாழ். மாநகர எல்லைக்குள், இந்துக்கல்லூரி, இந்துமகளிர் கல்லூரி, பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் தண்ணீர் வசதியுடன் கூடிய 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: த. நடராசா, 555/7, மதவடி ஒழுங்கை, கே. கே. எஸ். ரோட், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 4866

கொழும்புத்துறையில் வளன்புரம், யோசப் வீதி, இல 92 இல் 1½ பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.ஜோர்ஜ், 11A, வளன்புரம், கொழும்புத்துறை. 4863

நேரடியாக இறக்குமதி செய்த புனரமைக்கப்பெற்ற CD 125, C 90, C 70 HONDA மோட்டார் சைக்கிள்களும், DELICA வான்களும், ELF ISUZU டிரக் வண்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4857

## தேவை

கடிகாரம் திருத்துவதில் அனுபவமுள்ளவர் தேவை. தகுதிக்கேற்ற சம்பளம்கொடுக்கப்படும். விண்ணப்பிக்க: விளம்பர இல. 4854, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம், 4854

பப்படத் தொழில் செய்வதில் அனுபவமுள்ளோர் தேவைப்படுகின்றனர். நேரில் 18-10-82 காலை பின்வரும் முகவரிக்கு வேலை செய்த அனுபவச் சான்றிதழுடன் சமூகந்தரவும். உபதபாற்கந்தோரடி துறைமுகம், காரைநகர். 4858

பருத்தித்துறை டிஸ்பென்சரியில் வேலைசெய்ய பெண் உதவியாளர் தேவை. 30-10-82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல.4814 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4814

பிரசித்திபெற்ற கம்பனியின் தேயிலை, சோப் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு பிரதிநிதிகள் தேவை. அனுபவம் பற்றிய விபரத்துடன் விண்ணப்பிக்கவும். (தகுந்தசம்பளமும், கமிஷனும் வழங்கப்படும்). விளம்பர இல: 4829, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4829

நம்பிக்கையான, நல்லொழுக்கமுள்ள பாதுகாவலர் பளையிலுள்ள தென்னந்தோப்புக்கு தேவை. சிறந்த ஊதியம். எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். எஸ். என். நடராஜா, 51, அம்மன் வீதி, யாழ்ப்பாணம். 4841

## வாடகைக்கு

வைத்தியப் பிரிவு பல்கலைக்கழக மாணவர் இருவருக்கு தங்குமிட வசதியுண்டு. பிரதான பஸ் பாதையில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு அண்மையில் தனியான படுக்கை, படிப்பு அறை வசதிகளுடன் சகலநவீனவசதிகளும் உண்டு. இலகுவான வாடகை, சிபார்சுடன் விண்ணப்பிக்கவும் 341, கொழும்புத்துறை ரோட், யாழ்ப்பாணம். 4827

மேல் வகுப்பு மாணவிகளுக்கு சைவ உணவுடன் தங்குவதற்கு சகல வசதிகளும் கொண்ட விடுதி உண்டு. தொடர்பு கொள்க. சிவானந்தா மகளிர் விடுதி, இல.50 3-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். 4803

## சோதிடம்

வெளிநாடு செல்லுதல், திருமணம், தொழில், கல்வி முதலியன. குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. K. L. M. Krishnapillaiy, ஸ்ரீ பராசக்தி, சோதிட நிலையம், 18, சத்திரத்தடி சந்தை, யாழ்ப்பாணம். 4825

### காணி குத்தகைக்கு

கன்னாதிட்டியில் நகைக்கடை கட்டுவதற்கேற்ற சதுரக்காணி 20 வருட குத்தகைக்குண்டு. விண்ணப்பிக்க: நிர்வாகி, S. N. T. நிறுவனம், 25/4, கொரக்ககா அவெனியூ, சுவிசுத்தராம ரோட், கொழும்பு-6
4867

# 'தமிழினம் விடுதலைபெற்று வாழவேவிரும்புகிறது'

## மட்டக்களப்பில் குமார் உரை

(மட்டக்களப்பு) ''தமிழினம் விடுதலை பெற்று வாழ விரும்புகிறது. தமிழினம் ஒரு தனித்துவமான இனம் அது பிரிந்து வாழ்வதையே விரும்புகிறது என்பதை உணர்த்தவே தான் போட்டியிடுகிறேன்''

இவ்வாறு மட்டக்களப்பு சுபராக் மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதிதேர்தல் வேட்பாளருமான திரு. குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு வருகைதந்த திரு. குமார் பொன்னம்பலத்தை பெருந்திரளான மக்கள் குழுமிநின்று வரவேற்றனர். கல்லடி பாலத்திலிருந்து நாதஸ்வர இசை முழங்க அழைத்து வரப்பட்டார். இப்பிரசாரக் கூட்டத்தில் கூட்டணியின் முக்கிய பிரமுகர்களான திரு. பூபா மதுரநாயகம் திரு. அன்ரன் மரியநேசன் உட்பட கூட்டணி ஆதரவாளர்கள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் உட்பட பல இளைஞர்கள் இப்பிரசாரக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்

திரு. எஸ். ஜெயராச் தலைமையில் நடைபெற்ற இப்பிரசாரக்கூட்டத்தில் திரு.குமார் பொன்னம்பலம் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது இத்தேர்தல் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களைவிடமுற்றிலும் வேறுபட்டது. இதுவரைகாலமும் நடைபெற்ற தேர்தல்களில் தமிழனும் தமிழனும் தான் போட்டியிட்டார்கள் ஆனால் இதுசிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒருதமிழன் போட்டியிடும் தேர்தல் இத்தேர்தலில் ஒரு தமிழனும் போட்டியிடாவிட்டால் தமிழீழ போராட்டத்தை முறியடிப்பதற்கு சிங்கள தலைவர்களுக்கு ஒருவரப்பிரசாதமாக அமைந்து விடும்.

சிங்களத்தலைவர்களை தமிழ்மக்கள் ஏற்றுவிட்டார்கள் தமிழ் ஈழத்தை தமிழ்மக்கள் விரும்பவில்லை என்ற பிரசாரத்தை வெளிநாடுகளில் செய்யதவற மாட்டார்கள் எனவே தான் இந்த தேர்தலில் தமிழினம் விடுதலை பெற்று வாழவே விரும்புகிறது தமிழினம் ஒருதனித்துவமான இனம் அது பிரிந்து வாழ்வதையே விரும்புகிறது என்பதை அவர்களுக்கு உணர்த்தவே நான் போட்டியிடுகிறேன்.

இத்தேர்தலில் தமிழ்மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென கூட்டணித்தலைவர்கள் கூறுகின்றனர். எதற்காக அப்படி கூறுகிறார்கள்? அப்படியானால் தமிழ்மகன் ஒருவன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக் கூடாதென திரு. அமிர்தலிங்கம் சொல்வாரா? திரு.குமார் பொன்னம்பலத்திற்கு வாக்களிக்க கூடாதென கூறும் திரு. அமிர்தலிங்கம் எந்த ஒரு தமிழன் இத்தேர்தலில் போட்டியிட்டாலும் அந்த தமிழனுக்கு வாக்களிக்க கூடாதென கூறுவாரா?

கூட்டணியின் பகிஷ்கரிப்பு நாடகத்தை கிழக்கிலங்கை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கி

[5-ம் பக்கம் பார்க்க]


காணி விற்பனைக்கு

தொழிற்சாலை/வீடு கட்ட ஏற்ற 4 பரப்புக் காணி கண்டி/யாழ்ப்பாண வீதிக்கு அண்மையில் நாவற்குளியில் (சந்தியில்) உள்ளது

விபரங்கட்கு:

செ. செந்தில்நாதன்,
மாவட்டக் காரியாலயம், இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம். (4853)

MALE ACCOUNTS CLERK

A vacancy exists for an Accounts Clerk at Kilinochchi Branch of an Organisation which has its Head Office in Colombo

EXPERIENCE: At least 3 years experience in an established firm.

QUALIFICATION: Minimum S. S. C. with credit passes in Mathematics and English. A knowledge of Book-keeping is essential. Free accomodation available but not for the family.

CLOSING DATE: 20-10-82.

DATE OF INTERVIEW: 25-10-'82 at Jaffna Branch.

Application should be addressed to
Advt. No. 60 C/o Eelanadu Ltd, Jaffna.

காசாளர் – விற்பனையாளர்

வெற்றிடம் ————.

அனுபவமுள்ள, நேர்மையான காசாளரும் அத்துடன், வெல்டிங் பாவனைப் பொருட்களினை விற்பனை செய்வதற்கு அனுபவமும், எழுத்துமூலமான வேலைகளை தாமே பொறுப்பேற்று செய்வதற்கு ஆற்றல் உடையவிற்பனையாளரும் தேவை சம்பளம் பேசி ஒழுங்கு செய்யலாம்.

20-10-82க்கு முன்
கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்

முகமதலி அப்துலலி
5-7, பெரியகடை. யாழ்ப்பாணம்.
போன்: 221515

மேற்பார்வையாளர்கள்

வாகனம் திருத்தும் அறிவும்
தொழிலாளர்களை கட்டுப்படுத்தும் திறமையும் உள்ள
இளம் மேற்பார்வையாளர்கள் தேவை.
மும்மொழிகளிலும் பேசும் திறமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

மெக்கானிக்குகள்

மோட்டார் மெக்கானிக் அறிவுள்ளவர்கள் தேவை.
தொழில்நுட்ப தகமையுடையவர்களுக்கு முன்னுரிமை.

முன் அனுபவ விபரம், எதிர்பார்க்கும் சம்பளம், சிபார்சுக்குரியவர் இருவர் பெயர் விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

த. பெ. எண்: 1199, கொழும்பு.

தொழிற்சாலை மின்னியலாளர்கள்

தொழிற்சாலை மின் இணைப்புகள் பொருத்துதல், மோட்டார் திருத்துதல் மற்றும் மின்சாரக் கருவிகளை கையாளக்கூடிய மின்னியலாளர் தேவை. கொத்தலாவலபுர B. T. T. I. கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் அல்லது அதற்கு சமமான நிறுவனங்களில் பயிற்சிநெறி முறைகளை வெற்றிகரமாக முடித்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சாரதி

கார், வான் செலுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் உள்ள பழுது பார்க்கும் அனுபவத்துடன் கூடிய அனுபவமிக்க சாரதி தேவை. முன் அனுபவ விபரம், எதிர்பார்க்கும் சம்பளம் மற்றும் சிபார்சு செய்யக்கூடிய இருவரின் பெயர் விபரங்களுடன் சொந்த கையெழுத்தில்

த. பெ. எண்: 1199, கொழும்பு.
என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

# போலந்தில் ஆர்ப்பாட்டங்கள்:

# பொலிசார்கண்ணீர்ப்பிரயோகம்

## தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்யுமாறும் கோரிக்கை

வார்சோ, அக். 16

போலந்தின் சொலிடாறிற்றி சுதந்திர தொழிற் சங்கம் அரசாங்கத்தினுல் கலைக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து அங்கு மூன்றுவது தடவையாக நேற்று ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றது.

யோலந்திலுள்ள கிராக் கோவி என்ற பகுதியிலேயே இவ் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. ஆர்ப்பாட்டக்காரர்களைக்கலைப்பதற்காகபொலிசார் கண்ணீர்ப்புகைக்குண்டுகளையும், நீர்ப்பாய்ச்சும்குழாய்களையும் பாவித்தனர்.

கடந்த புதன்கிழமை போலந்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றின் போது ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சொலிடாறிற்றி தொழிற் சங்கம் கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக வேலை நிறுத்தங்களைச் செய்யுமாறு தொழிலாளர்களை, தொழிற்சங்கத்தலைவர்கள் கேட்டுள்ளனர்.

சொலிடாறிற்றிதொழிற்சங்கம் கலைக்கப்பட்டதை அமெரிக்காவும், பிரான்சும், ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும் கண்டித்துள்ளது தெரிந்ததே.

(வெ)

## விமானக் கடத்தல் முயற்சி தோல்வி

ஹனோய், அக். 16

58 போலந்து நாட்டு உல்லாசப் பிரயாணிகளுடன் பல்கேரியா விமானத்தை ஒஸ்திரியாவுக்கு கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் தோல்வியடைந்தார்.

இவ் விமானத்தில் தனது மனைவியுடன் பிரயாணம் செய்த 28 வயதுடைய இளைஞர் விமானத்தை ஒஸ்திரியாவுக்கு திசை திருப்புமாறு விமானம் பறந்து கொண்டிருக்கையில் விமானிகளுக்குப் பணித்தார். இதனுல் விமானக்கடத்தல்கார இளைஞருக்கும் விமானத்தில் பணிபுரிந்த விமானிகளுக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவில் விமானப் பணிப்பெண் ஒருவர் விமானக்கடத்தல் காரரால் காயமடைந்தார்.

வியட்நாம் விமானத்தளத்தில் இவ் விமானம் தரையிறங்கியதும் பொலிஸார் விமானக் கடத்தலில் ஈடுபட்ட இளைஞரைக் கைது செய்துள்ளதோடு இளைஞரின் மனைவியையும் விசாரணைக் குட்படுத்தியுள்ளனர்.

விமானப்பயணிகளும், ஓட்டிகளும், பணிப்பெண்களும் பாதுகாப்பாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தனிமையில் குறுக்கிட

## அரசியல் வாதிகளுக்குள்ள உரிமை இவர்களுக்கும் உண்டு!

- கனடா நீதிபதி

ரொரண்டோ, அக். 16

''தேர்தல் காலங்களில் பொதுமக்களை அணுகி தமக்கு ஆதரவு வழங்கும்படி கோரும் உரிமை அரசியல் வாதிகளுக்கு இருப்பது போலவே ஆடவர்களைக் கவரும்விதத்தில் நடந்துகொள்ளும் உரிமை விபச்சாரிகளுக்கும் உண்டு.

இவ்வாறு கனடாவைச் சேர்ந்த நீதிபதியான ரெட் மட்லோ என்பவர் விபச்சாரி ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கொன்றின் மீது தீர்ப்பு வழங்குகையில் தெரிவித்தார்.

இந்த வழக்கு ஹோட்டல் ஒன்றுக்கு வெளியே நின்றுகொண்டிருந்த ஒருவரின் தனிமையில் குறுக்கிட்டதாக விபச்சாரி ஒருவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்தது.

நீதிபதி மட்லோ மேலும் தம தீர்ப்பில் தேர்தல்காலங்களில் அரசியல் வாதிகள் பொது இடங்களில் நிற்கின்ற மக்களின் தனிமையில் குறுக்கிடுகின்றனர்.

இந்தவிபச்சாரியும்அவர்களை போன்றே தனது லாபம் கருதி நடந்துகொண்டுள்ளார்.

எனவே இவ்விரு சாராரதும் நடத்தைகள் இந்தவகையில் ஒத்திருக்கின்றமையால் தாம் குற்றம் சுமத்தப்பட்டுள்ள விபச்சாரியை விடுதலை செய்வதாகத்தெரிவித்தார் [கி]

# தமிழ்நாட்டில்10மணித்தியால கடையடைப்பு!

சென்னை. அக். 16

தமிழ்நாட்டில் நேற்று இடம் பெற்ற 10 மணித்தியாலக் கடையடைப்பின் போது பாரதூரமான அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரயில்கள் நிறுத்தப்பட்டதால் அவை தாமதித்து சென்றன.

காவிரி நீர் தமிழ்நாட்டிற்கு கிடைக்க மத்திய அரசைவலியுறுத்தக்கோரி கடையடைப்பை நடத்துமாறு அ. தி. மு. க. வும் அதன் தோழமைக் கட்சிகளும் கோரிக்கைவிடுத்ததையடுத்தே நேற்று அங்கு கடையடைப்புமேற்கொள்ளப் பட்டது.

தமிழ் நாட்டில் வரட்சிநிவாரணப் பணிகள் திறம்படமேற்கொள்ளப்படாமைக்கு கண்டனம் தெரிவிக்கு முகமாகவும் காவிரி நீர்ப்பிரச்னைக்கு தீர்வு காணப்படாமைக்கு எதிர்ப்புதெரிவித்தும் கடையடைப்பை நடத்துமாறு தி. மு. க. வும் மற்றும் எதிர்க்கட்சிகளும் கோரியிருந்தன.

தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இடம்பெற்ற கடையடைப்பு மாநில அரசுகளின் கவனத்தை ஈர்த்துள்ளதாக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

இந்திராகாங்கிரசும் ஜனதா கட்சியும் இக்கடையடைப்பில் கலந்துகொள்ளவில்லை.

## வழிப்பறிக் கொள்ளை: இருவர் கைது!

[யாழ்ப்பாணம்]

வழிப்பறிக் கொள்ளை நடத்திய இருவரை சுன்னாகம் பொலிசார் கைதுசெய்ததுடன் கொள்ளையடித்த பொருட்களையும் மீட்டுள்ளனர்.

சீனியன் கந்தசாமி 30வயது) சீனியன் அனுபுத்திரன் [32 வயது ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

மானிப்பாயைச் சேர்ந்த பெரியதம்பி கனகரத்தினம் என்பவர் ஈவினையில் உள்ள தொழிற்சாலையில் சாரதியாகக் டமையாற்றி விட்டு சைக்கிளில் வீடுசெல்லும் விழியில் பிரஸ்தாப இருவரால் தாக்கப்பட்டு சைக்கிளும், அவர் அணிந்திருந்தகைக்கடிகாரமும் கொள்ளையடிக்கப்பட்டதாக சுன்னாகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பொன். சுகுணேந்திரனுக்கு கிடைத்த இரகசியத்தகவலின் பேரில் விசாரணைக்குச் சென்ற சப் இன்பெக்டர் எஸ் சிவராசா, சார்ஜன்ட் எஸ். சிவலிங்கம், பொலிஸ்கான்ஸ்டபிள்கள் இ. சந்தசாமி, ரி. குணசிங்கம் ஆகியோர் சந்தேகநபர்களை கைது செய்ததுடன் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களையும் மீட்டனர்.

சந்தேகநபர் இருவரும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன்முன்னிலையில்ஆஜர் செய்யப்பட்டபோது இம் மாதம் 26-ம்திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். [மா]

## பஸ்விபத்து: 4 பேர் பலி

சென்னை, அக். 16

சேலம் மாவட்டத்தில் இடம் பெற்ற பஸ் விபத்தொன்றின் போது 4 பேர் பலியானுர்கள். இவ்விபத்தில் 11 பேர் காயமடைந்தனர். (வெ)

## பஸ் கால்வாயில் விழுந்தது பலர் நீரில் மூழ்கி மரணம்!

புதுடில்லி, அக். 16

பஞ்சாப் மாநிலத்தில் பஸ் ஒன்று கால்வாயில் விழுந்ததால் அதில் பிரயாணம் செய்த பலர் நீரில் மூழ்கியிருக்கலாமென அஞ்சப்படுகிறது. இதுவரை 6 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த பஸ்ஸில் 60 முதல் 80 பிரயாணிகள் வரை பயணம் செய்ததாகவும் கூறப்பட்டது. இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டமையினுலேயே இவ்விபத்து இடம் பெற்றதாம்.

இவ்விபத்து குறித்து பஞ்சாப் முதலமைச்சர் திரு. தர்பராசிங் வருத்தமும், அதிர்ச்சியும் தெரிவித்துள்ளார். [வெ]

## ஜனாதிபதி வேட்பாளர் !

## உரைகளை கேட்பதற்கு வவனியாவில் தொலைக்காட்சி

(வவனியா)

பொதுமக்களின் நலனுக்காக வவனியாநகரசபை அதன் பிரதான மண்டபத்தில் கலர் தொலைக்காட்சி பெட்டி ஒன்றை பொருத்தியுள்ளது.

தினமும் பொதுமக்களின் பார்வைக்காக இம்மண்டபம் திறந்து விடப்பட்டு வருகின்றது

தற்போது ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் தொலைக்காட்சியில் ஆற்றும் உரைகளை பொதுமக்கள் தினமும் சென்று கேட்பதற்கு கூடி நிற்பதை அவதானிக்கமுடிகின்றது.

நகரசபைத்தலைவர் திரு. ஐ. கேதீஸ்வரனின் முயற்சியினுல் பொதுமக்கள் பெரிதும்நன்மை அடைந்துள்ளனர். [க]

## பாரதியாரின் வெண்கலச்சிலை

புதுடில்லி, அக், 16

கல்கத்தாவில் பாரதியாரின் வெண்கலச்சிலையை மேற்குவங்கான முதலமைச்சர் திரு. ஜோதிபாசு திறந்துவைத்தார்.

இவ்வைபவத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும். கலந்துகொண்டு உரையாற்றினுர்.

[வெ]

# காவலிலுள்ள சீக்கியர்களை விடுதலைசெய்ய உத்தரவு

புதுடில்லி, அக். 16

வட இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் அரசியல், மத கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்தமையினுல் கைதுசெய்யப்பட்ட சீக்கிய இனத்தவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு மாநில முதலமைச்சர் திரு. பிரதாப் சிங் உத்தரவிட்டுள்ளார்

பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியின்பணிப்புரையையடுத்தே முதலமைச்சர் இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

சில தீய சக்திகள் வகுப்புவாதத்தைத் தூண்டி நாட்டில் குழப்பநிலையை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், அதனுல் மக்களைவிழிப்புடனிருந்து இன ஐக்கியத்தை ஏற்படுத்துமாறு பிரதம மந்திரி இந்திரா காந்தி கேட்டுள்ளார்.

இந்தியாவிலுள்ள 1 கோடி 10 லட்சம்சீக்கியர்களில்பெரும்பாலானவர்கள் பஞ்சாப் மாநிலத்திலேயே வாழ்கிறுர்கள். (வெ)

## பத்திரிகைச் சட்டம் பரிசீலிக்கக்குழு

சென்னை, அக், 16

தமிழ்நாடு பத்திரிகைச்சட்டத்தை பரிசீலனைசெய்ய செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தலைமையில் 13 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஒருமாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இக்குழு கேட்கப்பட்டுள்ளது. [வெ]

## இந்திய ஜனாதிபதிக்கு பூட்டான் மன்னர் வாழ்த்து

வாஷிங்டன், அக், 16

அமெரிக்காவில் சத்திர சிகிச்சைக்குள்ளாகி திருப்திகரமாகக் குணமடைந்து வரும் இந்திய ஜனாதிபதி திரு ஸெயில் சிங்கிற்கு வாழ்த்துச் செய்தியொன்றை பூட்டான் மன்னர் அனுப்பி வைத்துள்ளனர்.

(வெ)

தமிழ்மக்களின்

## வாக்குகள் தேவையில்லையென யாழ்ப்பாணத்தில் ஜே.ஆர்.கூறவில்லை

### பிரதமரின் செயலாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குத் தேவையில்லை என்ற முறையில் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தன யாழ் முற்ற வெளி கூட்டத்தில் கூறியதாக சாவகச்சேரிப் பகுதியில் நடந்த சுதந்திரக் கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். ஆனல் இது முற்றிலும் உண்மைக்கு மாருனகூற்று.'' என்று நேற்று முன்தினம் கொடிகாமத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி ஜனுதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய பிரதம மந்திரியின் இணைப்புச் செயலாளர் திரு. எஸ். எஸ். சண்முகலிங்கம் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''திரு. ஜயவர்த்தன தமது அரசில் சகல இன மக்களும் அங்கம் வகிக்கிருர்கள் என்றும் அமைச்சரவையிலும் கூட சகல இன மக்களும் இடம் பெற்றுள்ளார்கள் என்றும் யாழ் முற்றவெளி கூட்டத்தில் விளக்கினர். சடந்த பொதுத் தேர்தலின் போது தமது கட்சியின் சார்பில் போட்டியிட்ட 140 பேர் வெற்றியீட்டியதாகக் கூறிய ஜனுதிபதி தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குத் தேவையில்லையென ஒருபோதும் கூறவில்லை. எனவே தமிழ்மக்கள் அவருக்கு பல்லாயிரக் கணக்கான வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்யவேண்டும்'' என்றூர்.

இந்த நாட்டிலுள்ள தமிழ்–சிங்கள மக்கள் அனைவரும் தம்மை மீண்டும் ஜனுதிபதி பதவிக்குத் தெரிவு செய்வார்கள்என்ற திடநம்பிக்கையுடன் திரு. ஜெயவர்த்தன இருந்து வருகிறுர் என்று கூறிய திரு. சண்முகலிங்கம், சர்வாதிகாரப் போக்கினை அவர் கடைப்பிடிக்கின்ருர் என எதிர்க் கட்சிகள் கூறுவதில் அர்த்தமில்லை என்றும் குறிப்பிட்டார். கச்சாய்ப் பகுதி ஐ. தே. கட்சி அமைப்பாளர் திரு. கே.வி.பி. வேலாயுதபிள்ளை, கொடிகாமம் கிராமோதய சபைத் தலைவர் திரு. வே. குணரத்தினம் மற்றும் பலர் உரைநிகழ்த்தினர்.

## அறவழிப் போராட்டக் குழு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

அணுவாயுத பரிகரணக் கொள்கைப் பிரசாரத்தில் ஈடுபட்டுழைத்தமைக்காக 1982ம் ஆண்டுக்கான நோபல் சமாதான பரிசினைப்பெற்ற சுவீடன் தேசத்தைச் சேர்ந்த திருமதி அல்வா மைட்ரனுக்கும், மெக்ஸிக்கோ தேசத்தைச் சேர்ந்த அல்போன்சா காரீஸியாவுக்கும் அறவழிப் போராட்டக்குழு பாராட்டினைத் தெரிவித்துள்ளது.

நாவற்காடு கொலைவழக்கு:

## ''முதல் எறிவிழுந்ததும் சைக்கிளால குதித்தேன்''

[சாவகச்சேரி]

''சம்பவதினம் நானும் தந்தையும் சைக்கிளில் செல்லும் போது வடிவேலு வீட்டுக்குச் சமீபமாக 2–ம் எதிரி கல்லால் எறிந்தார். எறிபட்டதும் தந்தையார் நிலத்தில்விழுந்துவிட்டார். முதல் எறி விழுந்ததும் நானும் சைக்கிளால் குதித்து விட்டேன்.''

நாவற்காடு கொலை வழக்கிற் சாட்சியமளிக்கையில் காலமானவரின மகள் சின்னத்தம்பி சிவசோதிமலர் மேற்கண்டவாறு கூறினர்

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில்விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 82 யூலை 29–ல் நாவற்காட்டைச் சேர்ந்த இராமு சின்னத்தம்பி என்பவரை அவ்வூரைச் சேர்ந்த சி. சின்னர், ந.வைகுந்தவாசன், வ. கந்தையா, சி. தங்கவடிவேல் என்பவர்கள் வாள், கத்தி, பொல்லு என்பவற்ருற்தாக்கிக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் ஈ. தம்பிரத்தினம் சட்டத்தரணி எஸ். கணேசயோகன், சட்டத்தரணி திருமதி நளினி கணேசயோகன் ஆகியோரின் அனுசரணையோடு ஆஜராகினர்.

காலமானவரின் நலனைக் கவனிக்க சட்டத்தரணி செ பாலகிருஷ்ணர் பொலிஸ்சார்ஜன்ட் வி. செல்லையாவின் உதவியோடு ஆஜரானர். தொடர்ந்து சாட்சியமளிக்கும்போது சிவசோதிமலர் குறிப்பிட்டதாவது:–

கல்லெறி பற்றைக்குளிருந்து வந்தது. முதல் எறியுடன் நான் சைக்கிளால் குதித்துவிட்டேன். 2ம் எறிபட்டதும் தந்தையார் சைக்கிளால் விழுந்ததும் சின்னர், கந்தையா, வாசன் என்பவர்கள் ஓடிச் சென்று தந்தையாரோடு பிடிபட்டார்கள். நான் பயந்து வீட்டுக்கு ஓடிவிட்டேன். வீட்டில் எனது பேத்தியாருக்கு நடந்ததைச் சொன்னேன். அவர் உடனே சம்பவ இடத்திற்குச் செல்ல வழியிலே தந்தையாரை கொலை செய்து பற்றைக்குள் போட்டிருப்பதாக யாரோ கூற அவர் சம்பவ இடத்திற்குச்செல்லாது திரும்பிவந்து பொலிசாருக்கு நாங்கள் வாக்குமூலத்தைக் கொடுத்தோம். பின் மரண விசாரணையிலும் வாக்குமூலம் அளித்தோம்.

இந்த மாதம் 20ம் திகதி வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## பட்டப்பின் படிப்புக்கு தெரிவு

(அரியாலை)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்காக யாழ். பரியோவான்கல்லூரியின் பட்டதாரி ஆசிரியர்களான திருவாளர்கள் கே. சிவராசா, வை யுகபாலசிங்கம்ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பட்ரீஸியன் கழகத்தில் சீமாம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

உயர் கல்வியைப் பெறுவதற்கு எல்லா மாணவர்களுக்கும் சாத்தியமாவதில்லை. எனவே பட்ரீஸியன் கைத்தொழில் நிறுவனம்போன்ற தனியார் ஸ்தாபனங்கள் தொழிற்பயிற்சிகளை அளித்து உதவமுடியும் என்று வட மாநில கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். சீமாம்பிள்ளை அண்மையில் யாழ். சென்.பட்ரிக்ஸ் வீதியிலுள்ள பட்ரீஸியன்கழகத்தில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

திரு. சீமாம்பிள்ளை [illegible]துக்கு வருகைதந்த பொழுது கழகத்தின் தலைவர் டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் அவரை வாயிலில் வரவேற்ருர் கழகத்தின்பச்சைதங்கநிறங்களிலான பனைஓலை மாலையை கழகத்தின் விளையாட்டுப்பகுதிசெயலாளர் திரு. இஸட் சிங்கராயர் சிறப்பு விருந்தினருக்கு அணிவித்தார்.

பட்ரீஸியன் கழகத்தினருக்கு பரிசளிப்புப் நடைபெற்றதையொட்டி இந்நிகழ்ச்சி இடம் பெற்றது. சிறப்புவிருந்தினரும் கழகத்தின் சிரேஷ்ட உதவித் தலைவர் திரு. பி. தேவராசாவும் குத்துவிளக்குகளை ஏற்றிவைத்ததுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கழகத்தின் தலைவர் டாக்டர் பிலிப்ஸ் வரவேற்புரை நிகழ்த்தியபின் சிறப்பு விருந்தினரை பரிசுகளை வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

விளையாட்டு நிகழ்ச்சிகளையடுத்து இரவு போசனம் இடம் பெற்றது. திரு. சீமாம்பிள்ளை விருந்தையடுத்துப் பேசுகையில் தமது பழைய வகுப்பு சகாக்களுடன் இருப்பதில் மகிழ்ச்சியடைவதாகக் கூறி தம்மை நிகழ்ச்சிக்கு அழைத்தமைக்காக நன்றியும் தெரிவித்தார் இன்றைய கல்விச்சட்டங்களை அவர் விளக்கிப் பேசினர். கல்விச் சேவையில் ஈடுபட்டதின் பின்னர் இப்படியான ஒரு கழகத்திடமிருந்து தமக்கு அழைப்புவந்தது இதுவே முதல் தடவை என்ருர்.

கழகத்தின் பொதுச்செயலாளர் நன்றிதெரிவித்தார்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழ விடுதலை அணியின் தேர்தல் பகிஷ்கரிப்புக் கூட்டமொன்று இன்று காலை ஒன்பது மணிக்குவவனிக்குளம் இரண்டாம் யுனிற்றில் நடைபெறவுள்ளது.

வவனிக்குளம் கிராமோதய சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்துக்கு திரு பி. பவநாதன் தலைமை தாங்குவார். சிறப்புபேச்சாளர்களாக திருவாளர்கள் ஈழ வேந்தன், செந்தூர்ராசா ஆகியோர் கலந்துகொள்வார்கள். (கி)


கப்பலில் வானெலி அதிகாரிகளாகும் பயிற்சிநெறி

Ships Radio Officers Course

மரிரைம் வானெலித் தொடர்புச் சான்றிதழ்

1983 பரீட்சைக்குத் தயாரித்தல்

பயிற்சி முறை: (GENERAL CERTIFICATE) 12 மாதங்கள்
(SPECIAL CERTIFICATE) 6 மாதங்கள்

தொடக்கம்: 1-11-1982 – ஒழுங்குமுறை, நடவடிக்கைமுறை, தொழினுட்ப முறை ஆகிய துறைகளில் முறையான பயிற்சியளிக்கப்படும்.

விரிவுரையாளர்: இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற, எந்திரிமார் (ENGINEERS)கப்பலில் கடமையாற்றிய வானெலி இயக்க அதிகாரிகள், தொலைத் தொடர்புச் சாதன விற்பன்னர் முதலானேர்.

பயிற்சிக்கட்டணம்: (GENERAL) ரூபா 12,000/-
(SPECIAL) ரூபா 6,000/-
(தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம்)

கல்வித்தகைமைகள்: (GENERAL) G. C. E. (A. L) PHYSICS MATHS க.பொ.த. (உயர்தரம்) கணிதம், பௌதிகம் சித்தி. (SPECIAL) G. C. E. (O. L) CREDIT IN PHYSICS MATHS. க. பொ. த. சாதாரணம் கணிதம்/பௌதிகம்/விஞ்ஞானம் திறமைச்சித்தி.

கப்பலில் வானெலி இயக்கப்பயிற்சி பெற்றவர்களுக்குத் தொடக்கநிலைச் சம்பளம் 1200 அமெரிக்க டலர் முதல் படிப்படியாக முன்னேறும் வேலை வாய்ப்புப் பெறலாம்.

தொடர்பு கொள்ளவேண்டியது:

குளோபல் கொம்யூனிகேஷன்ஸ் லிமிற்றெட்,

GLOBAL COMMUNICATIONS LTD.

170, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்பு 11

கிளை: 127, கே. கே. எஸ். வீதி,
யாழ். கூட்டுறவுப் பன்முகப் பணிமனைக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.



யாழ்நகரில்

பலவகைப் பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்

எண்ணம் போல் வண்ணத் தெரிவுக்கு

பிரவுண்சன் ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சில திினங்கள் மட்டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
ராஜபார்வை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்—காஞ்சனு
காதலிக்க
நேரமில்லை
(புதிய பிரதி)

றீகல் (யாழ் நகர்) 5வது வெற்றி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ரஜனிகாந்த்-ரதி-ஜெய்சங்கர்
முரட்டுக்காளை (கலர்)

லிடோ (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ல வ கு ச (ஈஸ்ட்மன் ள்லர்)
பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஒழுங்கு
செ துதரப்படும்

2வது ஜனத்திரள் வாரம்
வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ராஜீவ்-ஶ்ரீகாந்த்-ஜோதி
நடித்த
ரயில்
பயணங்களில்
''ஒரு தலை ராகம்'' புகழ்
T. ராஜேந்திரனின் கதை, வசனம், டைரக்ஷனில்
உருவான வெற்றிச் சித்திரம்

ராணி (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-லக்ஷ்மி-முத்துராமன்-சிவகுமார்
ராஜராஜசோழன்
(கலர்—சினிமாஸ்கோப்)

வின்ஸர் (யாழ். நகர்) குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டும் 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

ஶ்ரீதர் (யாழ். நகர்)
Daily 10-30, 4-30, 7-00, 9-30. Sat., Sun. 200PM
A BRIDGE TOO FAR
(War Film)

## ''ஜே. ஆர். மீண்டும் வந்தால்

# வைத்திய, கல்விக்காக கிடைக்கும் மான்யங்கள் பறிக்கப்படும்''

(மன்னார்)

ஜனாதிபதி தேர்தலில் திரு. ஜே ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் தற்போது நாட்டு மக்களுக்கு மானியமாகக் கிடைத்துவரும் வைத்திய வசதி, கல்வி வசதி என்பன பறிக்கப்படும்.

இவ்வாறு மன்னார் பொது நூல் நிலையத்தின்முன் நடைபெற்ற ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஜனாப் அபுபூசுப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது 8 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தைச் சமாளிக்கமுடியாததால் இவ்வருடம் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனை மக்களுக்கு மூடிமறைக்கவே 84 ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலை ஜே. ஆர். ஜயவர்த்தன இவ்வருடமே நடத்துகிறார்.

ஐ. தே. கட்சி 77 ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த காலம் முதல் இன்றுவரை செய்துவரும் அநியாயங்களை உலகறியும். மீண்டும் ஐ தே. கட்சியைச் சேர்ந்த ஜே ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியானல் நாட்டு மக்களின் இறைமை, சுதந்திரம் பறிக்கப்படும்.

ஜனநாயக ஆட்சி நாசப்படுத்தப்பட்டு பாஸிச ஆட்சி உருவாக்கப்படும். (க)

## தமிழ் இனம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்களா? இல்லையா? என்பதை இன்றைய இந்த பெருந்திரளான ஜனசமுத்திரம் சாட்சி சொல்லும் தலைவர்கள் எதையும் கூறலாம். ஆனல் மக்கள் நீதிக்குபின் தான் செல்வார்கள் தமிழ் ஈழ இலட்சியத்திற்கு பின் தான் செல்வார்கள் தமிழன் என்ற உணர்வை மறக்க மாட்டார்கள் என்பதற்கு இந்த ஜனசமுத்திரம் சாட்சி சொல்லும்.

நான் வேட்பு மனுதாக்கல் செய்வதற்கு சில தினங்களுக்கு முன் என்னிடம் திரு. தொண்டமான் உட்பட நாலு அமைச்சர்கள் வந்து கேட்டார்கள் தயவு செய்து வாபஸ் பெற்றுவிடுங்கள் கூட்டணியும் எங்களுக்கு ஒத்துழைப்பதாக உறுதி அளித்திருக்கிறது. ஆகவே நீங்களும் வாபஸ் பெற்றுவிட்டால் தமிழ் மக்களின் வாக்குகள் அனைத்தும் யூ. என். பிக்குத்தான் என்று கேட்டார்கள் ஆனல் நான் மறுத்துவிட்டேன். ஒரு தமிழன் கட்டாயம் போட்டியிடத்தான் வேண்டும் என முடிவாக சொல்லி விட்டேன்.

இக்கூட்டத்தில் திரு. மோதில் நேரு, திரு பூ. பா. மதரநாயகம், திரு அன்ரன் மரியநேசம் மட்டக்களப்பு பல்கலைக்கழகமாணவர் பேரவைத் தலைவர் திரு. ஆனந்தமோகன் உட்பட பலரும் உரை நிகழ்த்தினர்கள். (க)

மனோகரா [யாழ் நகர்]
தினசரி ' காட்சிகள்
16—30வரை
சிவாஜி—சரோஜாதேவி
பாகப்பிரிவினை

## வடபகுதியில்

# ஜே. ஆருக்கு ஆதரவாக செல்லசாமி பிரசாரம்!

(வவுனியா)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு ஆதரவு தேடும்வகையில் கடந்த வாரம் இங்கு வந்த இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு. எஸ். எம். செல்லச்சாமி, மலையகமக்கள் மிகக்கூடுதலாக வாழும் பகுதிகளான புளியங்குளம், மாங்குளம். கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று பிரசார வேலைகளில் ஈடுபட்டார்.

இவருடன் வவுனியா ஐ.தே. கட்சி அமைப்பாளர் திரு. கா. த. புலேந்திரன், மாவட்ட இ. தொ கா. தலைவர் டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் உட்படப் பல பிரமுகர்கள் சென்றிருந்தனர்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நடந்த பிரசாரக்கூட்டத்தில் திரு. செல்லச்சாமி உரை நிகழ்த்தினர். [கு]

## பலாலி கொலைச் சம்பவம்:

# சரண்புகுந்த 5 பேரும் 25-ம்திகதிவரை றிமான்ட்

(மாவிட்டபுரம்)

பலாலி கொலைச் சம்பவம் தொடர்பாக பொலிசில் சரண்புகுந்த 5 சந்தேக நபர்களும் இம்மாதம் 25ம் திகதி வரை மல்லாகம்நீதிபதியால் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

பலாலியைச் சேர்ந்த ஆறுமுகம் இராஜரத்தினம் என்னும் 23 வயது இளைஞர் திருமண விவகாரம் ஒன்றுதொடர்பாக ஏற்பட்ட மோதலில் கத்தி வெட்டுக்கிலக்காகிக் கோரமாகக் கொலையுண்டிருந்தார்.

இச்சம்பவம் குறித்து மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் விசாரணை நடத்திய சமயம் கொலையுண்டவரின் தந்தை ஆறுமுகம்; சிறியதாய் தங்கம்மா, சகோதரன் ஜோன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

பிரேத பரிசோதனை செய்த யாழ். சட்டவைத்திய அதிகாரியும் சாட்சியமளித்தார். கொலையுண்டவரின் உடலில் 16 காயங்கள் காணப்பட்டதாகவும், இவற்றில் 8 காயங்கள் பாரதூரமானவையாக இருந்ததாகவும் அவர் தமது சாட்சியத்தின்போது குறிப்பிட்டார்.

விசாரணை முடிவில் நீதிபதி இது ஓர் கொலையெனத் தீர்ப்பு வழங்கினுர்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கணபதிப்பிள்ளை தேவராஜா என்பவர் கத்தியுடன் காங்கேசன்துறைப்பொலிசில் சரண்புகுந்திருந்தார்.

மேலும் இதுதொடர்பாகத் தேடப்பட்ட கே. இந்திரன், கே. செல்வராஜா எஸ் சோதிலிங்கம், எஸ் ஐயன் ஆகிய சந்தேகநபர்களும் காங்கேசன்துறை பொலிசில் சரண்புகுந்தனர்.

இந்த 5 சந்தேக நபர்களையும் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் இம்மாதம் 25ம்திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு சி. வி. விக்னேஸ்வரன் உத்தரவிட்டார்.

குறிப்பு;— மேற்படி கொலைச் சம்பவம் பற்றி 15—10—82 ''ஈழநாடு'' பத்திரிகையில் வெளியான செய்தியில் கொலையுண்டவர் கணபதிப்பிள்ளை தேவராஜா என்றும், கத்தியுடன் சரண்புகுந்தவர் ஆறுமுகம் இராஜரத்தினம் என்றும் தவறுதலாக இடம்பெற்றிருந்தது.

## பிரதமர் பதவிக்கு நால்வர் போட்டி

டோக்கியோ அக். 16

ஜப்பானின் ஆளும் லிபரல் ஜனநாயக கட்சியின் தலைமைப் பதவிக்கு நான்கு பேர் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது.

கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்படுபவர் இயல்பாகவே ஜப்பானின் பிரதம மந்திரியாவார்.

ஆளும் லிபரல் ஜனநாயக கட்சியின் தலைவரும் ஜப்பானிய பிரதம மந்திரியுமான திரு. சுசூக்கி அண்மையில் ராஜினுமாச் செய்திருந்தது தெரிந்ததே. [வெ]

சாந்தி - யாழ். நகர்

தினசரி 10-30, 02-30, 06-30
09-45 காட்சிகள்



600 படங்களுக்கு மேல் நடித்து உலகசரித்திரம் படைத்த பிரேம்நசீரின் மகன் ஷா நவாஸ், ''சுவரில்லாத சித்திரங்கள்'' புகழ் சுமதி, கவர்ச்சித்தாரகை மாயா
ஆகியோரின் உயர்ந்த நடிப்பில்......
ஶ்ரீ கருமாரியம்மன் கிரியேஷன்ஸ் அளிக்கும்
பாதைமாறிய
பருவங்கள்
''பெண்கள் என்ருல் தெய்வம்'' என்ற இந்துமதத்தின் உயர்ந்த தத்துவத்தை உதாசீனம் செய்த பருவக்காளையின் உணர்ச்சிக் காவியம்!
இசை: மோகன் ராஜ் தயாரிப்பு: ஶ்ரீஸ்கந்தராஜா டைரக்ஷன்; எஸ். தேவேந்திரா

தமிழ்மொழிக்குள்ள

# தேசியமொழி அந்தஸ்தை மாற்றப்போகிறீர்களா?

## தமிழ்மக்களுக்கு ஜே. ஆர். விடுக்கும் கேள்வி

(கொழும்பு)

தமிழ்பேசும் மக்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன் தமிழ்மொழியைத் தேசியமொழியாக ஆக்யுள்ளது 78-ம் ஆண்டின் அரசியல் யாப்பு. இதனை இல்லாமற் செய்வதானுல் தமிழ்பேசும் மக்களின் மொழியுரிமைக்கே ஆபத்து என்பதைக் கூறவாவேண்டும்? 7 ஆண்டுகள் தமிழ் மொழிக்கு இடமளிக்காதவர்கள் இனி அதனைச்செய்வார்களா? இதனை உங்கள் சிந்தனைக்கேவிட்டுவிடுகிறேன்.

இவ்வாறு ஐ. தே. க. ஜனதிபதிவேட்டாளர்களும்பதவியிலிருக்கும் ஜனதிபதியுமான ஜே ஆர் ஜயவர்த்தன நேற்று வானெலியில் நிகழ்த்திய தேர்தல் பிரசாரசொற்பொழிவில் குறிப்பிட்டார். திரு. ஜயவர்த்தன மேலும் கூறியதாவது:

இன்றைய ஜனதிபதிப் பதவிக்கும் முன்இருந்த ஜனதிபதி பதவிக்கும் இடையே உள்ள வேறுபாடு, மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றது. இன்றைய ஜனதிபதி மக்களாலே தெரிவு செய்யப்படுகின்றூர். 80 இலட்சம் மக்கள் அவரைத் தெரிவு செய்கின்றனர். அவர் எந்த இனத்தவராகவும் இருக்கலாம், எந்தச் சாதியைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். எந்தச் சமயத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

எனவே இவ்வாறு 78ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு, ஜனதிபதி பதவியால் மக்களின் இறைமையைப் பேணிக் காக்கின்றது. ''மக்களே இந்நாட்டு மன்னர்கள்'' என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஜனநாயகப் நிலையூன்ற வழிவகுத்துள்ளது சர்வசன வாக்கெடுப்பு இல்லாமல் ஜனதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்கவும் முடியாது; பாராளுமன்றத்தின் ஆட்சிக்காலத்தை அதிகரிக்கவும் இயலாது. இப்படியாக ஓர் அரசியல்யாப்பு வழங்கும் ஜனதிபதியையே நீங்கள் எதிர்வரும் புதன் கிழமை தெரிவுசெய்ய இருக்கின்றீர்கள்.

78 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு அரசியல் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் யாவற்றுக்கும் முற்றுப்புள்ளிவைத்தது. அவசரகால நிலைமை அரசடனப்படுத்தப்பட்டால், திது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, வாக்கெடுக்கப்படுதல் வேண்டும். இன்னும் மூன்றில் இரண்டு பங்குபெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற பின்பே அதனை மூன்று மாதங்களுக்குக் கூடுதலாக நீடிக்கவும் முடியும். அரசாங்கம ஆட்சியை நடாத்த அவசரகால நிலைமை அவசியம் என்று மக்கள் கருதினலன்றி, அதனைப் பிரகடனப்படுத்தவும் முடியாது. நீடிக்கவும் இயலாது. எனவே, 78 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் மக்களின் இறைமைபேணப்பட்டுள்ளது.



தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த மகேந்திரராஜா கல்யாணி தம்பதிகளின் தவப்புதல்வி விஜயவாணி தனது முதலாவது பிறந்ததினத்தை தமது இல்லத்தில் 17-10-82ல் (இன்று) வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றூர். இவர் சகல கலைகளையும் கற்று சிறப்புடன் பல்லாண்டுவாழ அப்பா, அம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமாமார், மாமிமார், பேரன்மார், பேத்திமார் மற்றும் உற்ருர் உறவினர்கள் துர்க்கை அம்மன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாணியை வாழ்த்துகின்றனர். 4870

### நந்தாவில் அம்பாள் மஹாகும்பாபிஷேக பூர்த்திவிழா

(கொக்குவில்)

கொக்குவில் – நந்தாவில் கற்புலத்து மனேன்மணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேக விழா இன்று சிறப்பாக நடை பெறுகிறது.

காலையில் சங்காபிஷேகமும் பதினெரு மணிக்கு வசந்த மண்டப விசேஷ பூஜையும் நடைபெறும். மாலை நவராத்திரி பூஜை ஆரம்மாகி ''மஹா கும்பாஷேக மலர்'' முதல் பிரதியை திரு. சி. சின்னத்துரை ஜே பி. பெற்றுக்கொள்வார். பிரமஸ்ரீ பி. கோபல கிருஷ்ண ஐயர் பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணியசாஸ்திரிகள் ஆசியுரைகளைத் தொடர்ந்து கலாவிநோதன் 'சின்னமணி' க. நா. கணபதிப்பிள்ளையின் வில்லிசை விருந்து இடம் பெறும்.


# PING PONG

## Chinese Restaurant Jaffna

1. RESTAURANT MANAGER:
   EXPERIENCE: Minimum three years
   QUALIFICATION: Should have a good educational background preferably with hotel school diploma.
   SALARY: In accordance with qualification and experience.

2. RECEPTIONIST:
   EXPERIENCE: Preferable.
   QUALIFICATION: G C. E (O/L)or N. C. G. E. Applicants must be fluent in English and have a pleasant personality.
   SALARY: Negotiable.

3. STEWARDS AND STEWARDESSES
   REQUIREMENTS: Applicants should have a pleasant personality with ability to converse in English.
   SALARY: Negotiable.

APPLICANTS WITH FULL BIO – DATA SHOULD BE FORWARDED TO

**Personnel Manager**
PING PONG CHINESE RESTAURANT
17, 1st CROSS STREET
JAFFNA
On or Before 27th of October

4843


### சூடானில்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் தாம் மிகவும் நிர்க்கதியான நிலையில் சூடான் நாட்டில் கைதிகளைப்போல அடைபட்டிருப்பதாகவும் தம்மை மீட்க உடன்நடவடிக்கைமேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளனர்.

கடந்த மாதம் சில்லாலையை சேர்ந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் ஏற்பாட்டின் பேரில் பாக்கிஸ்தான் நாட்டு ஏஜென்சி பிரதிநிதிஒருவர் ஐந்த இளைஞர்களிடம் தலா 20 ஆயிரம ரூபா வீதம் பெறப்பட்டு மத்திய கிழக்கு நாடொன்றில் வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதியளிக்கப் பட்டதாம்.

இவர்கள் சூடான் நாட்டில் விமான மூலம் சென்று இறங்கியபோது அங்கு தங்கிநிற்பதற்கான விசா அனுமதிப்பத்திரம் இவர்களிடம் கைவசம் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அரசின்காவல் படையினரால தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இது பற்றித் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை அங்கிருந்து மீட்டு வருவது குறித்து இலங்கை வெளிநாட்டு அமைச்சுடன் இளைஞர்களின் பெற்றேர்கள் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

(க)

# இப்படியும் நடக்கிறது

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போல வடக்கிலும் முக்கியமான கல்லூரிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் கல்வி அறிவை வளர்ப்பதுதான் இத்திட்டத்தின் முக்கியநோக்கம்.

'அந்த'க் கல்லூரிக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, 'வீடியோகசற்' மூலமாக கல்வி அறிவூட்டும் படங்களை 'டி. வி'யில் காண்பிக்க 'டெக்'கும் கிடைத்தது.

'டெக்' கிடைத்ததையுடன் அக்கல்லூரி 'டி. வி' யில் காண்பிக்கப்பட்டது – ''திருவிளையாடல்'' சினிமாப்படம்!

ஓ.... இதுவும் ஒருவகையில் அறிவூட்டும் சமய ப(ா)டமாக இருந்திருக்குமோ?

'ஊடுருவி'

### குமாரின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனதிபதி தேர்தலில் போட்டியிடும் திரு. குமார் பொன்னம்பலத்தை ஆதரித்து யாழ்பபாணம் திறந்தவெளியரங்கில் இன்றிரவு பொதுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.


## கிர்லொஸ்கர் ஜெனரேற்றர்ஸ்

KIRLOSKAR GENERATORS

3 KVA - 39,500 ரூபா
15 KVA - 115,000 ரூபா
22 KVA - 140,000 ரூபா

31-10-8 க்கு முன்னர் வாங்கினல் விசேட கழிவு உண்டு. குறிப்பிட்ட தொகை மட்டும் கையிருப்பில் உண்டு.

## சாமுவேல் சன்ஸ் அன் கம். லிமிட்

208, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

## ஓர் நற்செய்தி

யாழ். குடாநாட்டில் எப்பகுதியிலாவது

1. வீடுகள்
2. காணிகள் (Buildable Lands)
3. தோட்டங்கள்
4. கட்டிடங்கள் (Buildings)

விற்பனவுக்கிருந்தால் உடனடியாக எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

விபரங்களுக்கு:

திட்ட அதிகாரி,
தோட்டக் காணிப்பிரிவு,
**த பினன்ஸ் கம்பனி லிமிட்.**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் போன்: 23680


## மரண அறிவித்தல்

### பிரமஸ்ரீ ஐ. சுப்பிரமணியக்குருக்கள்

கோண்டாவில் பிரமஸ்ரீ ஐ சுப்பிரமணியக்குருக்கள் சென்ற 15-10-82 வெள்ளிக்கிழமை மாலை சிவபதமடைந்தார். அன்னர் திருமதி சீதாலக்ஷ்மியின் அன்புக்கணவரும், சியாமளாதேவி பாலசுப்பிரமணியம், உஷாதேவி பாலச்சந்திரஐயர், ஸ்ரீதரன் (U. S A.), பவானி மேருகிரீஸ்வரசர்மா, Dr ஹரிஹரன் (NASA, U S A.), சுந்தரேசன் (மேற்கு ஜேர்மனி), உமாதேவி சரவணபவன், சசிசேகரன், கிருஷ்ண (மேற்கு ஜேர்மனி), சுதர்சனன் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். ஈமைக்கிரியைகள் நாளை 18-10-82 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

ஸ்ரீ முருகபவனம்,
கோண்டாவில் மேற்கு.
4868

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.